எஸ்.பி. ஆகியோர் ஆணை பிறப்பித்தும், பி.ஆர்.சி. பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் அங்கு நிற்பதாக ரெகார்டு செய்து கொண்டு, அங்கு நிற்பதே இல்லை. ஆகவே அவை அங்கு நிற்பதற்கும், முன்னாள் நகரசபைத் தலைவர், ஒரு கோடி ரூபாய் செலவில் அந்தப் புதிய பஸ் ஸ்டாண்டை அமைத்து, அது பொதுமக்களுக்குப் பிரயோசனப்படாமல் இருக்கிறது; அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் .(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விருதுநகரிலிருந்து பஸ் போவது பற்றியது கேள்வி. அதுகுறித்துக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: பஸ் ஸ்டாண்டு செயல்படுத்தப்படாமல் இருக்கிறதே; மக்களுடைய வரிப் பணம் வீணாகப் போகிறதே என்பதற்காக, அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, கூடுதலாக அவ்வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கப்படுமா என்று கேட்டார்கள். கூடுதலாகத் தேவைப்படுமென்று மக்கள் கருதினால், கூடுதலாகவே 2 பேருந்துகள் ஒரு வாரத்திற்குள் அந்தப் பகுதியிலே இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் மற்றொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். புதிய பேருந்து நிலையத்தில் அவை நிறுத்தப்படுகின்றனவா, பழைய பேருந்து நிலையத்தில் நிறுத்தப்படுகின்றனவா என்று கேட்டிருக்கிறார்கள். அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தினால். தடை வாங்கி இருக்கிறார்கள். அதன்மீது பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது குறித்து தனிக் கேள்விப் போட்டால், அதற்கு விளக்கமாகப் பதில் அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

86—

அரியூர் பஞ்சாலையை இலாபகரமாக இயக்க நடவடிக்கை

***33710—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 10]

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள அரியூர் பஞ்சாலை மூடப்படும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆலையை இலாபகரமாக இயக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள அரியூர் நூற்பாலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது. இருப்பினும் இவ்வாலை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வாலை இலாபத்தில் இயங்குவதற்கு ஏற்கனவே முதல் கட்டமாக ரூ. 55.00 இலட்சம் அளிக்கப்பட்டு இத்திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது. இரண்டாம் கட்டமாக, இவ்வாலைக்கு ரூ. 85.73 இலட்சம் அளிக்கப்பட்டு இயந்திரங்களை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் நூலின் தரம் உயர்வதோடு உற்பத்தித் திறனும் அதிகரித்து உற்பத்திச் செலவு குறைய வாய்ப்புள்ளது. மேலும் இவ்வாலையானது, தடைபடாமல் இயங்குவதற்காக காட்டன் ரிவால்விங் பண்டிலிருந்து ரூ. 128 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, ஆலை இலாபத்தில் இயங்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கனவே 15 இலட்சமும், பிறகு 85.73 இலட்சமும், பிறகு காட்டன் ரிவால்விங் ஃபண்டிலிருந்து 128 இலட்சமும் கொடுத்ததாக இங்கே அறிவித்திருக்கிறார்கள்.....

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: ரூ. 15 இலட்சம் அல்ல; ரூ. 55 இலட்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆம், 55 இலட்சம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, ரூ. 55 இலட்சமும், பிறகு ரூ. 85.73 இலட்சமும், பிறகு காட்டன் ரிவால்விங் ஃபண்டிலிருந்து ரூ. 128 இலட்சமும், வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இயங்குகிற அரியூர் கூட்டுறவு நூற்பாலைக்கு வழங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே, நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே

கொண்டு வந்து, அதற்கு ஒரு சிறப்பு நிதி அளிக்க வேண்டுமென்று சொன்னேன். காரணம், அந்த நிதியெல்லாம், ஏற்கனவே கொடுத்ததெல்லாம் காலியாகிவிட்டது. மாதச் சம்பளம்கூட கொடுக்க முடியாமல், அந்த நூற்பாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் 17-10-1994 அன்றுகூட ஊர்வலம் நடத்தி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நான் வேண்டுவதெல்லாம், 1980-லிருந்து 1994 வரை இருந்த அதிகாரிகளினுடைய கவனக் குறைவு காரணமாகத்தான் இந்த நிர்வாகத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, தரமான பஞ்சை வாங்கி— காரணம், பஞ்சு தரமில்லை என்று கூறுகிறார்கள்; வாங்கக்கூடிய பஞ்சை நல்ல தரமான பஞ்சாக நீங்கள் வாங்கிக் கொடுப்பீர்கள் என்று சொன்னால் உற்பத்தியைப் பெருக்கி இலாபத்தில் அதை இயக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சொன்னதுபோல அமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பு நிதியாக 3 கோடியாவது குறைந்தபட்சம் கொடுத்து, அந்த ஆலை இனிமேல் இலாபகரமாக நடப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகாரிகளுடைய கவனக் குறைவு என்றெல்லாம் குற்றம் சுமத்தினார்கள். அவர்கள் பேசுகின்றபோது சில தவறான கருத்துக்களைச் சொன்னார்கள். முதற்கட்டமாக 55 இலட்சம்; இரண்டாவது கட்டமாக ரூ. 85.73 இலட்சம்; மூன்றாவது காட்டன் ரிவால்விங் பண்டிலிருந்து ஒரு கோடியே 28 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது அந்த நூற்பாலைக்கு. இந்த நூற்பாலை நட்டத்தில் இயங்குவதற்கான காரணத்தை நாம் அலசி ஆராய வேண்டும். தற்போது அந்த ஆலையினுடைய உற்பத்தியில் 30 சதவீதம் வேஜஸாகத் தருகிறோம். நார்ம்ஸ்படி 14-லிருந்து 15 சதவீதம் வேஜஸ் இருந்தால்தான் ஒரு ஆலை இலாபகரமாக இயங்குவதற்கு உகந்ததாக இருக்கும். இந்த 30 சதவீதம் எப்படி ஆனது என்றால், 1982-ஆம் ஆண்டு இந்த ஆலையை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக அன்றைய அரசு ஏறத்தாழ 25,000 கதிர்களோடு ஆலையை டெவலப் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டது. தமிழக அரசும் நிதி ஒதுக்கியது. ஆனால் மத்திய அரசிலிருந்து வரவேண்டிய நிதி வரவில்லை. அது ஏறத்தாழ 5184 கதிர்களுக்கு மட்டுமே கடன் உதவி வழங்கியது.

1994 நவம்பர் 10]

அதன் காரணமாகத்தான் அன்றையதினம் அதற்குத் தேவையான தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்கள். There were overhead expenses. இதை அறிந்த புரட்சித் தலைவியின் அரசில், ஆட்சிப் பீடத்திற்கு வந்தவுடன் அதிகமாக இருக்கிற தொழிலாளர்களை வேறு நூற்பாலைகளுக்குச் செல்ல ஆணை பிறப்பித்து, அறிவுறுத்தப்பட்டார்கள். ஆனால், சில முக்கியமான அறிவார்ந்த வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்குப் போய் ஸ்டே வாங்கி விட்டார்கள். ரொம்ப அதிமேதாவிகளாக இருக்கிறவர்கள், தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கம் இல்லாமல் அவர்களைப் பட்டினி போடவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் இங்கேயே வேலை செய்ய வேண்டும் என்று சொல்லி 'ஸ்டே' வாங்கி விட்டார்கள். ஆலையை ஓட்ட வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதற்காகத்தான் அதிகமாக உள்ள தொழிலாளர்களை வேறு ஆலைகளுக்குப் போகவேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படிக் கருதுகிற காரணத்தினால்தான் வேறு நூற்பாலைகளுக்கு அவர்களை மாற்றம் செய்கிறோம். அவர்களுக்குத் தொழில் தரவேண்டும் என்பதற்காக. இப்போது அவர்களாகவே வந்து வேறு நூற்பாலைகளுக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக 33 பேர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். படிப்படியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். மிக விரைவில் அந்த ஆலை இலாபத்தில் இயங்குவதற்கான வழிவகைகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திற்குப் போயிருப்பது வேறு கதை. வழக்கறிஞர்களை நாம் இந்த இடத்தில் குற்றம் சாட்ட வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் வழக்கறிஞர்களைக் குற்றம் சாட்டவில்லை; ரொம்பவும் அறிவார்ந்தவர்கள் என்று சொல்கிறார்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அட்வகேட்ஸ் என்றால் லேர்னட் பீப்பிள் என்றுதான் அர்த்தம். ஆரம்பிக்கும் போதே நாங்கள் 'லேர்னட் கவுன்சில்' என்றுதான் ஆரம்பிப்போம். நான்

கேட்பதெல்லாம் சிறப்பு நிதியைத்தான். ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொன்ன நிதியை அளித்தும்கூட, இப்போது பி.எஃப்., ஈ.எஸ். ஐ., கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டவேண்டிய பணம் எல்லாம் கட்ட முடியாமல் நிலுவையில் இருக்கின்றன. மாத ஊதியம் கூடக் கொடுக்க முடியாமல் இன்றைய தினம் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். கர்ம வீரர் காமராஜர் அவர்களுடைய கரத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஆலை இப்போது நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. நட்டம், நட்டம் என்று சொன்னால் தனியார் வசம் போய் விடுமோ என்கிற அச்சம் தொழிலாளர்கள் மத்தியிலே, மாவட்ட மக்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான் நான் அமைச்சர் அவர்களிடம் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் 3 கோடி ரூபாயை சிறப்பு நிதியாக வழங்குவதாக ஏற்கனவே அறிவித்திருக்கிறீர்கள். அந்தப் பணத்தை நீங்கள் கொடுத்து, நல்ல தரமான பஞ்சையும் வாங்கிக் கொடுப்பீர்கள் என்று சொன்னால்-அங்கு அதிகமாக இருக்கக்கூடிய தொழிலாளர்கள், அமைச்சர் ஏற்கனவே சொன்னதுபோல் மற்ற ஆலைகளுக்குப் போகத் தயாராக இருக்கிறார்கள். மிகச் சிறப்பாகப் பணியாற்றக் கூடியவர்களை நிரந்தரமாக, வைத்து, இனிமேல் பழைய கணக்கைக் காட்டாமல் புதிதாக 3 கோடி ரூபாயைக் கொடுத்து-மூடப்படும் என்கிற அச்சத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிற அந்த ஆலைக்கு ஒரு வாழ்வு அளிக்க வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக சிறப்பு நிதியை வழங்கத் தயாராக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுற்றிச்சுற்றி தரமான பஞ்சு, தரமான பஞ்சு என்று சொல்கிறார்கள். பஞ்சை வாங்குவதே அவர்கள்தான். நூற்பாலையிலே உள்ளவர்கள்தான் பஞ்சை வாங்குகிறார்களே தவிர, அரசோ, மற்றவர்களோ யாருமே தலையிடுவதில்லை என்பதைத் திட்டவட்டமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் நஷ்டத்திற்குக் காரணம், இந்த ஆலை 1957-58-ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. ஏறத்தாழ புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வருவதற்கு முன்பு மாடர்னைசேஷனுக்காக சல்லிக் காசு யாரும் தரவில்லை. புரட்சித் தலைவி ஆட்சிப் பீடத்திற்கு வந்த பிறகுதான் முதற்கட்டமாக மாடர்னைசேஷனுக்கு 55 இலட்சமும்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 10]

இரண்டாவது கட்டமாக 85.73 இலட்சமும் தந்த பிறகுதான் தரமான நூல் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. ஓரளவுக்கு தரமான நூல் வந்துகொண்டிருக்கிறது. படிப்படியாகத்தான் வளர்க்க முடியுமே தவிர, ஒரே ஆலைக்கு இத்தனை கோடி ரூபாய் தரவேண்டுமென்றால், அருள்கூர்ந்து என்.டி.சி. மில்ஸுக்கு தருவதுபோல் மத்திய அரசில் வாதாடி, போராடி--அவர்களுக்கு மாடர்னைசேஷனுக்கு ஆயிரம், இரண்டாயிரம் கோடி தருகிறார்கள் அல்லவா, என்.டி.சி. மில்லுக்கு, சிட்டா நூல் தயாரிக்காத நூற்பாலைகளுக்கு எல்லாம் பல கோடி ரூபாய் தருகிறார்கள்—அதுபோன்று தயவுசெய்து இங்கே வாதாடுகின்ற வாதங்களை, நீங்கள் உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து அங்கே வாதாடினால் உகந்ததாக இருக்கும் என்பதைத் தங்களுக்குத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி ஆட்சிப் பீடத்திற்கு வந்த பிறகுதான் மாடர்னைசேஷனுக்கு இது தரப்பட்டது. கர்மவீரர் காமராஜர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே காமராஜர் தியாகத்தை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், அதற்குப் பின்னாலே அந்தப் பொறுப்பிலே வந்தவர்கள் மாடர்னைசேஷனுக்கு ஆண்டுக்காண்டு வின்ச் மாற்றுவது, கேம்ஸ் மாற்றுவது, போன்றவைகளுக்கு பணம் தரவில்லை. புரட்சித் தலைவி வருகிறவரையிலும் அதைக் காத்து வைத்திருந்தார்கள். புரட்சித் தலைவி வந்த பிறகுதான் படிப்படியாக அனைத்தும் நன்கு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87, திரு. க. குப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

87—

மாதவரம் நகரியத்தில் தணிகாசலம் நகரில் நீர் தேங்குவதைத் தடுத்தல்.

9753—திரு. க. குப்பன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் நகரியத்தில் தணிகாசலம் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதியில் நீர் தேங்குவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?